


மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் மாவட்ட செயலாளர் – அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் நடைபெற்றதில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் தொடர்பாக ஆலோசனைகளை கழக மண்டல பொறுப்பாளர் – அமைச்சர் தங்கம் தென்னரசு வழங்கி சிறப்புரையாற்றினார். உடன் ஆ.வெங்கடேசன் எம் எல் ஏ., கரு தியாகராஜன், டாக்டர் திலீப் ராஜகண்ணப்பன், சுப.த.சம்பத், ஆனந்த், விஜய கதிரவன் மற்றும் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.



மதுரை மேற்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கழக நிர்வாகிகள் 5ஆயிரம் பேருக்கு நலத்திட்ட உதவிகளை மாவட்டச் செயலாளர் அமைச்சர் பி.மூர்த்தி வழங்கினார். உடன் ஆ.வெங்கடேசன் எம் எல் ஏ., தனச்செல்வம், டாக்டர் திலீப் ராஜ கண்ணப்பன், ஆர்.கணேசன் மதுரை பாலா, ஆர்.கே.ஜெயராமன், சிறைச்செல்வன், மருதுபாண்டியன், காவேரி, சுதன், மதி வெங்கடேஷ், அன்பழகன், தவமணி, அழகு பாண்டி, ராசாமணி, எம்.இளங்கோ, வீரராகவன், மீராஜான், ஐயப்பன், அன்புச்செல்வன், மருதுராஜா, வன்னி முத்துப்பாண்டி, பரவை பாலசுப்ரமணியம், துரை சரவணன், நாகநாதன், ராஜகோடி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

### கரூர் துயர சம்பவம்:

# உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு நிதி உதவி!

## தொல்.திருமாவளவன் எம்.பி. வழங்கினார்! வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. முன்னிலை!

கரூர், அக்.13 -

தமிழ்நாடு வெற்றிக் கழகம் - விஜய் கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு தலா. ரூ. 50 ஆயிரம் நிதியை வி.சிக. கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் எம்.பி. கரூர் சட்டமன்ற உறுப்பினர் செந்தில் பாலாஜி முன்னிலையில் வழங்கினார்.

கடந்த மாதம் 27ஆம் தேதி இரவு கரூரில் விஜய் பிரச்சார கூட்டத்தின் போது ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் நிவாரண உதவியாக தலா ரூ.50 ஆயிரம் வழங்கும் நிகழ்ச்சி கரூரில் நடைபெற்றது. வி.ச.க. தலைவர் தொல் திருமாவளவன் தலைமை வகித்து 41 பேரின் குடும்பத்தினருக்கும் நிவாரண உதவிகளை வழங்கினார்.

கரூர் சட்டமன்ற உறுப்பினர், கரூர் மாவட்ட கழக செயலாளர் வி. செந்தில் பாலாஜி முன்னிலை வகித்தார். பின்னர் தொல்.திருமாவளவன் எம்.பி. செய்தியாளர்களடம் கூறியதாவது,:

பாதிக்கப்பட்டவர்களில் சிலர் தங்களுக்கு அரசு வேலை வழங்க வேண்டும் என கோரிக்கை விடுத்தனர். முதல்வரின் கவனத்திற்கு இதை கொண்டு செல்வோம் . பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிடும் வகையில் முதல்வர் மு க ஸ்டாலின் அவர்கள் மிகுந்த அக்கறையுடன் செயல்பட்டார்கள் என்பதை நாடறியும். காயம் அடைந்தவர்கள், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினரையும் உடனடியாக சந்தித்து நிவாரண உதவிகளையும் வழங்கியுள்ளார்கள். அதைப்போல முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி பாதிக்கப்பட்டுள்ள வீடுகளுக்கு நேரில் சென்று ஆறுதல் கூறியிருக்கிறார். நிவாரண உதவித் தொகையையும் வழங்கி இருக்கின்றார். இவ்வாறு அவர் கூறினார்.

### ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசால் கொண்டு வரப்பட்ட

# தகவல் அறியும் உரிமை சட்டத்தை ஒன்றிய பா.ஜ.க. அரசு சிதைத்து விட்டது!

## காங்கிரஸ் கட்சி குற்றச்சாட்டு!

புதுடெல்லி,அக்.13-

டெல்லியில் காங்கிரஸ் தலைமை அலுவலகத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அக்கட்சியின் பொதுச்செயலாளர் ஜெய்ராம் ரமேஷ், 20 ஆண்டுகளுக்கு முன்பு 2005 ஆம் ஆண்டு இதே நாளில் கொண்டு வரப்பட்ட தகவல் அறியும் உரிமை சட்டத்தை ஒன்றிய பா.ஜ.க. அரசு சிதைத்து விட்டதாக குற்றம் சாட்டினார். இதே போன்று, கிராமப்புற வேலைவாய்ப்பு திட்டம், அனைவருக்கும் கல்வி சட்டம் ஆகியவற்றையும் மோடி அரசு முறையாக செயல்படுத்தாமல் உள்ளதாக புகார் தெரிவித்தார். தகவல் அறியும் சட்டம் தொடர்பாக தாம் தொடர்ந்த வழக்கு 7 ஆண்டுகளாக உச்சநீதிமன்றத்தில் விசாரணைக்கு வராமல் உள்ளதாக கூறிய ஜெய்ராம் ரமேஷ், தகவல் ஆணையத்தின் தலைமை தகவல் ஆணையர் பதவி தொடர்ந்து காலியாக கிடப்பதன் மூலம், பல லட்சம் மனுக்கள் தேங்கி கிடக்கிறது என்று புகார் கூறினார். தற்போது தனி நபர் தரவுகள் பாதுகாப்பு என்று கூறி மேலும் தகவல் உரிமை சட்டத்தை ஒன்றிய அரசு முடக்கி உள்ளதாகவும், தரவுகள் பாதுகாப்பு சட்டத்தை கடந்த ஆகஸ்ட் மாதம் அமல்படுத்தியது மூலம், முதல் முழுமையாக தகவல் உரிமை சட்டத்துக்கு ஒன்றிய அரசு மூடுவிழா நடத்திவிட்டதாகவும் ஜெய்ராம் ரமேஷ் குற்றம் சாட்டினார்.

### பரமக்குடியில் சுதந்திர போராட்ட வீரர்

# தியாகி இமானுவேல் சேகரனாரின் 102வது பிறந்த நாள் விழா!

## அமைச்சர்கள் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் – கயல்விழி செல்வராஜ் பங்கேற்பு!

பரமக்குடி,அக்.13-

சுதந்திர போராட்ட வீரர் தியாகி இமானுவேல் சேகரனாரின் 101 ஆவது பிறந்த நாளை அரசு விழாவாக பரமக்குடியில் கொண்டாப்பட்டது. இதில். அமைச்சர்கள் ஆர். எஸ். ராஜகண்ணப்பன்,கயல்விழி செல்வராஜ் மற்றும் ஆட்சியர், சட்டப்பேரவை உறுப்பினர்கள் பங்கேற்று 196 பயனாளிகளுக்கு 90 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

சுதந்திர போராட்ட வீரரும் ஒடுக்கப்பட்ட மக்களுக்காக பாடுபட்ட தியாகி இமானுவேல் சேகரனாரின் பிறந்த நாளை அரசு விழாவாக தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார்.

இதனைதொடர்ந்து, தியாகி இமானுவேல் சேகரனாரின் 101 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு பரமக்குடியில் தனியார் மகாலில் இரண்டாம் ஆண்டு அரசு விழா நடைபெற்றது.

இதில், மாவட்ட ஆட்சியர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் தலைமை வகித்தார். வனம் மற்றும் கதர் துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் என். கயல்விழி செல்வராஜ், தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ் விஜயன், ராமநாதபுரம் நாடாளு மன்ற உறுப்பினர் கே. நவாஸ்கனி, சட்டப்பேரவை உறுப்பினர்கள் காதர் பாட்ஷா முத்துராம லிங்கம், செ. முருகேசன், கருமாணிக்கம்,தமிழரசி ரவிக்குமார்,மாவட்ட வருவாய் அலுவலர் கோவிந்த ராஜலு ஆகியோர் கலந்து கொண்டு தியாகி இமானுவேல் சேகரன் திருவுருவ படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர். ஒடுக்கப்பட்ட மக்களுக்கான வாழ்ந்த தலைவருக்கு தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அரசு விழாவாக அறிவித்து கௌரபடுத்தினர் என அமைச்சர்கள் புகழாரம் சூட்டினர்.

இதனைதொடர்ந்து, பல்வேறு துறைகள் சார்பில் 196 பயனாளிகளுக்கு 90 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை அமைச்சர்கள் வழங்கினர்.

இந்த நிகழ்ச்சியில், முன்னாள் அமைச்சர் சுந்தர ராஜன்,முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினர் எம்.எஸ். கே.பவானிராஜேந்திரன்,பரமக்குடி நகர் மன்ற தலைவர் சேதுகருணாநிதி,துணைத்தலைவர் குணசேரகன்,முன்னாள் மாவட்ட செயலாளர் திவாகரன்,மாநில விவசாய அணி துணைச்செயலாளர் குணசேகரன்,மாவட்ட துணைச்செயலாளர் கருப்பையா, பரமக்குடி வடக்கு நகர் செயலாளர் ஜீவானந்தம்,நகர் மன்ற உறுப்பினர்கள் பிரபா சாலமன், ஒன்றிய செயலாளர்கள் வாசுதேவன்,ஜெயக்குமார்,குணசேகரன்,கதிரவன்,போகலூர் ஊராட்சி ஒன்றிய முன்னாள்துணைத் தலைவர் பூமிநாதன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

### ஒன்றியப் பெருந்தலைவர் தயாளன் தலைமை!

# மரக்காணம் ஒன்றியத்தில் ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்டம் முகாம்!

## செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

திண்டிவனம் அக் 13-

மரக்காணம் ஒன்றியம் தென்நெற்குணம், கோவடி ஆகியஊராட்சியியில்நடைபெற்ற

உங்களுடன் ஸ்டாலின் திட்டம் முகாமை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ தொடங்கி வைத்து கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகத்தினை வழங்கினார். ஒன்றிய பெருந்தலைவர் தயாளன்தலைமைதாங்கினார்.

விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் ஒன்றியம் தென் நெற்குணம், கோவடி ஆகிய ஊராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் நடைபெற்றது.

மரக்காணம் ஒன்றிய பெருந்தலைவர் தயாளன் தலைமை தாங்கினார். ஒன்றியதுணை சேர்மன் பழனி முன்னிலை வகித்தார். ஊராட்சி மன்ற தலைவர் கோவடிஉமாவதி மனோகர் அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ கலந்து கொண்டு உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகமே தொடங்கி வைத்து பொது மக்களிடமிருந்து வரப்பெற்ற கோரிக்கை மனுக்களை கணினியில் பதிவு செய்வதற்கு அவர் அறிவுறுத்தினார்.

அப்போது முகாமில் பொதுமக்களிடமிருந்து வரப்பெற்ற கோரிக்கை மனு குறித்து துறை சார்ந்த அதிகாரிகளிடம் கேட்டு அறிந்த அவர் மனுக்கள் மீது விரைவில் தீர்வு காண வேண்டும் என அவர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

தொடர்ந்து வேளாண்மை துறை சார்பில் விவசாயிகளுக்கு உளுந்து மற்றும் தோட்டப்பயிர் விதைகளையும்,கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகத்தினையும் சர்க்கரை, ரத்த அழுத்தம், நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு மக்களை தேடி மருத்துவத் திட்டத்தின் கீழ் மருந்து மாத்திரைகள் அடங்கிய பெட்டகத்தினைமுன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ வழங்கினார்.

அப்போது உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் மக்களை தேடி மருத்துவம், நலன் காக்கும் ஸ்டாலின், எய்ட்ஸ் குறித்து நாட்டுப்புற கலைஞர்கள் கரகாட்டத்தின் மூலம் பொது மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

முகாமில் தென் நெற்குணம், கோவடி, மொளசூர் ஆகிய கிராமங்களை சேர்ந்த பொதுமக்கள் குடும்ப அட்டை, பட்டா மாற்றம், இலவச வீட்டு மனை பட்டா, முதியோர் உதவித்தொகைக்கு மின் இணைப்பு மாற்றம், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை கேட்டு கோரிக்கை மனு வழங்கினர்.

நிகழ்ச்சியில்மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் சேகர், விழுப்புரம் வடக்கு மாவட்ட துணை செயலாளர் ரவிக்குமார்,மரக்காணம் மதிய ஒன்றிய செயலாளர் ரவிச்சந்திரன், வட்டார வளர்ச்சி அலுவலர் அருளரசி, ஒன்றிய கவுன்சிலர்கள் விநாயகம், நாகஜோதி கணேஷ், வேலாயுதம், அம்புஜம் சுகுமார், நிர்வாகிகள் ரவிக்குமார்,மீனா குமாரி, முருகன், ஆதிகேசவன், ராமமூர்த்தி, தேவதாஸ், மாவட்ட ஆதி திராவிட நல அணி அமைப்பாளர் திருமலை,கிளைக் கழக செயலாளர்கள் பொன்னன், ராஜேஷ் முருகன், ராஜ் ,ஜீவானந்தம், முருகானந்தம், ராஜதுரை, ராஜாங்கம், சேகர், மனோகர்,ஒன்றிய அணி நிர்வாகிகள் மங்கள லட்சுமி, சலவாதிராஜா, கலைமணி, விநாயகம், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### நெல்லை மத்திய மாவட்டத்தில்

# வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர முறை திருத்தம் குறித்த ஆலோசனைக் கூட்டம்!

## மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ. தலைமை! ஏ.எல்.பி. தினேஷ் பங்கேற்பு!

நெல்லை.அக்.13-

நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க அலுவலகத்தில் வாக்காளர் பட்டியலில் (SIR )எனும் சிறப்பு தீவிரமுறை திருத்தம் குறித்து, நெல்லை கிழக்கு மாநகர தி.மு.க நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம், நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர்,பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வஹாப் தலைமையில் நடைபெற்றது.மாநகர கிழக்கு பொறுப்பாளர் ஏ. எல்.பி.தினேஷ் வரவேற்றார்.

இந்நிகழ்வில் பாளை தொகுதி பார்வையாளர் வசந்தம் ஜெயக்குமார்,மாநகர வழக்கறிஞர் அணி அமைப்பாளர் சுரேஷ்குமார் ஆகியோர் தலைமை கழக ஆணையின்படி,கழக வழக்கறிஞர் அணி நிர்வாகிகளின் வழிகாட்டுதலோடு,SIR என்ற சிறப்பு தீவிரமுறைத் திருத்தம் எனும் சதியை முறியடிக்க,கழக நிர்வாகிகள் ஒவ்வொருவரும் மிக கவனமாக செயல்படுவது பற்றியும், வீடு, வீடாகச் சென்று வாக்காளர் பட்டியலை சரி பார்ப்பது பற்றியும் உரையாற்றினர்.

நிகழ்வில், மாநகர துணை செயலாளர்கள் பிரபு பாண்டியன், அப்துல் கையூம்,சுதா மூர்த்தி, பகுதி செயலாளர்கள் சுப்பிரமணியன், அன்டன் செல்லத்துரை,சையது முகைதீன்,துபாய் சாகுல் ஹமீது, சாமுவேல் உள்பட வட்ட செயலாளர் கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

நிறைவில் மாநகர பொருளாளர் பூக்கடை அண்ணாதுரை நன்றி கூறினார்.




விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக சார்பில் செஞ்சியில் முரசொலி செல்வத்தின் திருவுருவப்படத்திற்கு விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. மாலையை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார். உடன் விஜயகுமார், கார்த்திக், நெடுஞ்செழியன், சங்கர் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்

# சென்னையில் பனை விதைகள் நடும் பணி!

சென்னை, அக்.13 -

நேற்று (10.10.2025) மேயர் திருமதி ஆர்.பிரியா, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் 1 முதல் 15 வரையிலான அனைத்து மண்டலங்களிலும் 1.50 இலட்சம் பனை விதைகள் நடும் பணியினைத் தொடங்கி வைக்கும் விதமாக, பெருங்குடி மண்டலம், பாலவாக்கம் கடற்கரையில் பனை விதையினை நட்டு தொடங்கி வைத்தார்.

மேலும், பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் “நம்ம தங்கா” விழிப்புணர்வு சின்னத்தினை அறிமுகப்படுத்தினார்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பசுமைப் பரப்பினை அதிகரிக்கும் வகையில், கடந்த நான்கரை ஆண்டுகளில் மொத்தம் 4,26,429 எண்ணிக்கையிலான பாரம்பரிய நாட்டு வகை மரங்கள் நட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும் புதிய மரக்கன்றுகள் நடும் பணியும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.



சிவகங்கை மாவட்டம், காரைக்குடி தாலுகா, ஒ.சிறுவயல் ஊராட்சி சாலிகிராமத்தில் நடைபெற்ற கிராம சபைக் கூட்டத்தில் பொதுக்குழு உறுப்பினர் பள்ளத்தூர் கே.எஸ்.ரவி மற்றும் கிராம பொதுமக்கள் கலந்து கொண்டார்கள்.



நெல்லை கிழக்கு மாவட்டம் நாங்குநேரி மேற்கு ஒன்றிய பொது உறுப்பினர்கள் கூட்டம் ஒன்றிய கழக அலுவலகத்தில் ஒன்றிய செயலாளர் ஆர்.எஸ்.சுடலைக்கண்ணு தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் நெல்லை கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் பங்கேற்று பல்வேறு ஆலோசனைகளை வழங்கி உரையாற்றினார். நிகழ்வில் கழக நிர்வாகிகள் ஜார்ஜ் கோசல்,சித்திக்,பரமசிவஅய்யப்பன், கனகராஜ் இசக்கிபாண்டி, சாந்தகுமாரி செல்லையா,சகுந்தலா பாபு,புஷ்பபாண்டி,சின்னத்துரை, சந்திரகலா,மாயகிருஷ்ணன்,சங்கர், ஜார்ஜ்,(BLA2) பொறுப்பாளர்கள் ஆரோன்,மகேந்திரன்,லெனின், விஜய், தங்கஈஸ்வரி மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.